# ஈரோடு - சின்னியம்பாளையத்தில், ‘இந்தியா’ கூட்டணியின் - ஈரோடு, நாமக்கல், கரூர் தொகுதி வேட்பாளர்களுக்கு வாக்குகள் கேட்டு -

# கழகத் தலைவர் உரையாற்றிய பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டக் காட்சிகள்!














கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.3.2024) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியை அடுத்த சின்னியம்பாளையத்தில் நடைபெற்ற ‘இந்தியா’ கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் நாமக்கல் தொகுதி வேட்பாளர் மாதேஸ்வரன் அவர்களையும், ஈரோடு தொகுதி வேட்பாளர் பிரகாஷ் அவர்களையும், கரூர் தொகுதி வேட்பாளர் செல்வி.ஜோதிமணி அவர்களையும் அறிமுகப்படுத்தி ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டாக்டர். மா.மதிவேந்தன், திருமதி.கயல்விழி செல்வராஜ், கழகத் துணைப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ், மாவட்ட கழகச் செயலாளர்கள் ராஜேஷ்குமார், திருப்பூர் செல்வராஜ், நல்லசிவம், பத்மநாபன், மதுரா செந்தில், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான கொங்கு ஈஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்துல்லா, சின்ராஜ், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், காந்திராஜன், இளங்கோ, திருமதி.சிவகாமசுந்தரி உள்ளிட்ட முன்னாள் – இந்நாள் உறுப்பினர்கள், ‘இந்தியா’ கூட்டணியின், ஒருங்கிணைந்த நாமக்கல், ஈரோடு மற்றும் கரூர் மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ‘இந்தியா’ கூட்டணி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.